**O.S. No. 308 /2019**

**Date:06.03 .2026**

**பி.வா.சா.1.அய்யாத்துரை**

**5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் மகள் உறவு முறை. 2 ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் மகன் ஆவார். 3 ம் பிரதிவாதி எனது தாயார் ஆவார் அவர் இப்போது உயிருடன் இல்லை. வாசுதேவநல்லூர் கிராமம் காமராஜர் 1 ம் தெருவில் சின்னச்சாமி குமாரர் அய்யாத்துரை என்பவர் நான் மட்டும் தான் வேறு நபர் இல்லை. எனக்கு 74 வயது ஆகிறது. நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் 23.11.2011 ம் தேதிய செட்டில் மெண்டு ஆவணத்தில் கண்ட முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **23.11.2011 ம் தேதிய செட்டில்மெண்டு ஆவணம் எனது அப்பா எனது மகனுக்கு எழுதிக் கொடுத்த செட்டில் மெண்டு என்றால் சரிதான். 23.11.2011 ம் தேதிய செட்டில்மெண்டு ஆவணம் பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என்ற விவரம் தெரிந்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். குத்தாலிங்க நாடார் எனது தாத்தா ஆவார். எனது தாத்தாவிற்கு சொத்தானது பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதற்கு நான் எந்த ஆவணத்தையும் பார்த்தது இல்லை. எனது தாத்தாவும், தாத்தாவின் மக்களும் 1955 ம் ஆண்டு பதிவு பாகம் பிரிவினை ஆவணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகம் பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தபசில் சொத்து எனது அப்பாவிற்கு கிடைக்கப் பெற்றது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது எனக்கு 5 வயது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு கிடைத்த சொத்தை தான் எனது மகனான 2 ம்பிரதிவாதிக்கு எனது தந்தை பிவாசா.ஆ.1 ஆவணத்தின் மூலம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு நான் ஒருவன் தான் வாரிசு ஆவேன். எனது அப்பா சின்னச்சாமி நாடார் எவ்வித ஏற்பாடும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால்

தெரியாது. எனது அப்பா எனது மகனுக்கு செட்டில் மெண்டு ஆவணம் எழுதிக் கொடுத்ததால் எனக்கு தாவா சொத்தில் எந்த பங்கும் கிடையாது என்றால் சரியல்ல. 10 மரக்கால் என்பது எத்தனை செண்டு என்றால் 3/4 செண்டு ஆகும். நான் சொல்வது போல் எனக்கோ, வாதிகளுக்கோ தாவா சொத்தில் எந்த பங்கும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சின்னச்சாமி நாடாருக்கு தாவா சொத்து தனித்த சொத்தாக இருப்பதால் மேற்படியார் அவரது பேரனான 2ம் பிரதிவாதிக்கு பிவா.சா.,ஆ1 ஆவணத்தின் மூலம் செட்டில் மெண்டு எழுதி கொடுப்பதற்கு உரிமை உண்டு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்டு ஆவணத்தை ஏற்றுக்கொண்டு எனது மகன் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அனைவரும் அனுபவித்து வருகிறோம். நாங்கள் அனைவரும் அனுபவித்து வருவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தைப் பொறுத்து என் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது பட்டா எண் ஞாபகம் இல்லை. பட்டாவிற்கு தீர்வை ஏதும் போட்டேனா என்றால் எனது மகன் 2ம் பிரதிவாதிக்குத் தான் தெரியும். நானும், வாதிகளும் எனது மகன் 2ம் பிரதிவாதியும் தாவா சொத்தை அனுபவித்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும்,எனது மகனும் சேர்ந்து 2020ம் தேதியில் தாவா இடத்தில் 5ம் பிரதிவாதி பயிர் செய்திருந்த வாழையையும், நெல்பயிரையும் தீ வைத்து அழித்து விட்டதாக எங்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், அது பொய் வழக்கு. மேற்படி குற்ற வழக்கு சிவகிரி நீதிமன்றத்தில் நடைபெறுகிறது. தாவா இடத்திற்கு பக்கத்தில் கிணறு உண்டு என்றால் சரிதான். தாவா இடத்தில் தற்போது 5ம் பிரதிவாதி தான் வாழை பயிர் செய்துள்ளார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யாததால் சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என கட்சி செய்கிறேன். எனது மகன் 2ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு 2014ம் ஆண்டில் கிரையம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றுக்கொண்டு 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால்

அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணமும், 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணமும் செல்லாது என்று சொல்லியுள்ள நிலையில் தற்போது வழக்கிற்காக மேற்படி கிரைய ஆவணங்கள் பற்றி தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி கிரையம் பெற்று அவர் பெயரில் பட்டா மாறிய விவரமும், 4ம் பிரதிவாதியிடமிருந்து 5ம் பிரதிவாதி கிரையம் பெற்று பட்டா மாறிய விவரமும் எனக்கு தெரியாது. தபசில் சொத்துக்களை தவிர எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட வீடு ஒன்று உள்ளது. வேறு சொத்துக்கள் எதுவும் கிடையாது. தபசில் சொத்துக்களை தவிர எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் உள்ளதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை சின்னச்சாமி நாடார் கடந்த 1984ல் தபசில் சொத்தான 32 செண்டை எனது மகன் மற்றும் வாதிகளுக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். எனது மகனான 2ம் பிரதிவாதிக்கு இந்த வாதிகள் 21.07.1999ல் தாவா சொத்தில் உள்ள 3/4 பங்கை பொறுத்து பதிவு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. நானும், வாதிகளும், 2ம் பிரதிவாதிகள் சேர்ந்துகொண்டு 5ம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு அவரிடம் பணம் பறிக்கும் நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி அருணாச்சலம் என்பவர் நாங்கள் சிறையில் இருந்தபோது ரூ. 5லட்சம் வாங்கி கொண்டு வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று கூறினார்கள். இது சம்மந்தமாக சைக்கிள் கடை வைத்திருந்த முருகன் என்பவர் என்னிடம் பேசினார். 5ம் பிரதிவாதி என்னிடம் நேரடியாக பேசவில்லை. மேற்படி சங்கதிகளைப் பொறுத்து எதிர் வழக்குரையில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கோ, வாதிகளுக்கோ மற்றும் 2ம் பிரதிவாதிக்கோ எந்தவித பங்கு பாத்தியமும் கிடையாது என்றாலும், பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்

என்றாலும் சரியல்ல. 4ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணங்களைப் பொறுத்து நான் எந்தவித எதிர் கோரிக்கையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.